### தேர்தல் பிரசாரத்திற்கு

# சரண்சிங் விமானப்படை விமானத்தை பாவித்தார்

## தேர்தல் கமிஷனரிடம் முறையீடு

புதுடில்லி, அக். 24

இந்திய காபந்துப் பிரதமர் திரு. சரண்சிங் அண்மையில் மேற்கொண்ட ஆந்திரப்பிரதேசசுற்றுப்பயணத்திற்கு இந்திய விமானப்படை விமானத்தை பயன்படுத்தியதை பல கட்சித் தலைவர்கள் கண்டித்துள்ளனர்.

இதுதொடர்பாக இந்திய தேர்தல் கமிஷனரிடம் முறையிடப்பட்டுள்ளது.

திரு. சரண்சிங் தமக்கும் தமது கட்சிக்கும் அரசியல் லாபம் கருதியே சுற்றுப் பயணத்தை மேற்கொண்டார் என்றும் எதிர்வரும் பாராளுமன்ற இடைத்தேர்தலுக்கான தேர்தல் பிரசாரத்திலேயே, தமது சுற்றுப் பயணத்தின் போது கூடிய கவனத்தையும் செலுத்தியிருந்தார் என்றும் தேர்தல் கமிஷனரிடம் முறையிடப்பட்டுள்ளது.

தேர்தல்கமிஷனர் திரு [illegible] இம் முறையீடு பற்றி கருத்துத் தெரிவிக்கையில் தேர்தல் பிரசாரங்களுக்கு வாகனங்கள் பாவிக்கப்படுவது தடைசெய்யப்படவில்லை. இது விடயமாக பூரணவிசாரணை மேற்கொள்ளப்படும்'' என்றார். (கு)

### இந்திய-பாகிஸ்தான் கிரிக்கெட் டெஸ்ட்

புதுடில்லி. அக் 24

இந்திய - பாகிஸ்தான் கிரிக்கெட் டெஸ்ட் நவம்பர் மாதம் 6-ம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

ஜஹீர் அப்பாஸ் இக்பால் தலைமையிலான பாகிஸ்தான் கோஷ்டி இந்தியாவில் ஆறு டெஸ்ட் போட்டிகளிலும் ஆறு பிராந்தியப் போட்டிகளிலும் கலந்துகொள்ளும் (கு)

## பஹுகுணா உத்தியோகபூர்வ காங்கிரஸில் சேருவாரா?

புதுடில்லி அக். 24

இந்திய காபந்து அரசாங்க அமைச்சரவையில் இருந்து அண்மையில் ராஜினாமாச் செய்துகொண்ட திரு பஹுகுணாவை உத்தியோகபூர்வ காங்கிரசில் சேர்ந்துகொள்ளுமாறு தாம் கோர இருப்பதாக உத்தியோகபூர்வ காங்கிரஸ் தலைவர் திரு. தேவராஜ் அர்ஸ் கூறியுள்ளார்

கர்நாடக மாநிலத்தில் நடைபெற்ற பொதுக்கூட்ட மொன்றில் பேசுகையிலேயே திரு அர்ஸ் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

திரு அர்ஸ் தொடர்ந்து பேசுகையில், ''உத்தியோகபூர்வ காங்கிரஸ் எதிர்வரும் இடைத்தேர்தலில் 200 இடங்களில் போட்டியிடும். [illegible] மிகவிரைவில் [illegible] லுக்கான அறிக்கை தயாரிக்கப்படும் என்றும் கூறினார் (கு)

### தாக்குதல் விமானங்கள்

புதுடில்லி, அக் 24

தாக்குதல் விமானங்களை [illegible] அரசாங்கம் முடிவு செய்து வருகிறது என்று இந்திய காபந்து [illegible] பாதுகாப்பு அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் கூறினார்.

விமானப் படை உயர் தளகள மாநாட்டில் மேற்கண்டவாறு கூறிய அமைச்சர் விமானப்படையைப் பலப்படுத்த இன்னும் பல ஹெலிகப்டர்கள் வாங்கப்படும் என்றும் கூறினார் (கு)

## கி.ஜெர்மனியிலிருந்து 20,000 ரஷ்யதுருப்புகள் வாபஸாகும்

### சோவியத் ஜனாதிபதி தகவல்

பேர்லின், அக் 24

20 000 சோவியத் இராணுவ வீரரும் 1 000 தாங்கிகளும் ஒரு குறிப்பிட்ட தொகை இதர ராணுவ தளபாடங்களும், அடுத்த [illegible] ஆண்டுகளில் கிழக்கு ஜெர்மனியிலிருந்து வாபஸ் [illegible] மேற்கு ஐரோப்பாவில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் நடுத்தர ரகங்களிலான அணுவாயுதங்களின் எண்ணிக்கை கூட்டப்படக் கூடாது என்ற நிபந்தனையுடன் தமது மேற்குப் பகுதிகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் நடுத்தர அளவிலான அணுவாயுதங்களின் எண்ணிக்கையை விலிருந்து ஒரு குறிப்பிட்ட தொகையைக் குறைக்க சோவியத் யூனியன் தயாராகவுள்ளது''

இவ்வாறு ஜெர்மன் ஜனநாயக குடியரசின் 30வது ஆண்டு வைபவத்தில் உரையாற்றிய சோவியத் ஜனாதிபதி பிரெஷ்னேவ் குறிப்பிட்டார்.

'மேற்குலகின் அரசியல்வாதிகளது பேச்சுக்களைப் பார்க்கும் போது அவர்களும் இதையே விரும்புகிறார்கள் போல் தெரிகிறது. ஆனால் துரதிருஷ்டவசமாக அவர்களது செயல்களாவும் இதற்கு மாறாகவுள்ளன [illegible]

[illegible] அணுவாயுதங்களை தயாரித்து புகலித் தூண்டிவிடுவதே அவர்களது நோக்கம். ஐரோப்பாவைப் பொறுத்தவரையில் அவர்கள், சமாதானத்திற்கு [illegible] அச்சுறுத்தலைக் கண்டு [illegible] 'அமெரிக்காவுடன் சேர்ந்து மேற்கு ஜெர்மனியும் இந்த அபாயகரமான நடவடிக்கைத் தயாரிப்பில் முக்கிய பங்கு கொண்டுள்ளது என்பதில் சந்தேகமில்லை. உலகின் இதர எல்லா பகுதிகளையும் போன்றே எமக்கு சமாதானம், நிலையான சமாதானம் வேண்டும். இத்தான் நமது வெளிநாட்டுக்கொள்கையின் பூர்வாங்க அடித்தளம்; அதன் முதுகெலும்பு. இக்கொள்கையை நாம் இடைவிடாது. சோர்வுறாது கடைப்பிடிக்கிறோம்'' என்று லியோனிட் பிரெஷ்னேவ் வலியுறுத்தினார்.

### தமிழகத்தில் பலத்த மழை

(சென்னை)

தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவ மழை ஆரம்பித்துள்ளது. கடந்த 24 மணி நேரமாக தமிழ்நாடு முழுவதும் பலத்த மழைபெய்துகொண்டிருப்பதாக சென்னை வானிலை அவதானநிலையம் அறிவித்துள்ளது.

### எழுபத்துஇரண்டு வயதிலும்

## நின்று கொண்டே எழுதும் சீனப்பெண் எழுத்தாளர்!

பீக்கிங், அக். 24

சீனப் பெண் எழுத்தாளர் டிங் லிங் பழைய தலைமுறையைச் சேர்ந்தவராவார் இவர் 1907-ல் பிறந்தார் இவருடைய எழுத்தின் பிரதான அம்சம், அமைதியான ஆரவாரமோ ஆடம்பரமோ அற்ற இயல்பாகும் சில மக்களின் உணர்ச்சிகளை பிரதிபலிக்கும் ஓர் அம்சம்

இவர் மாபெரும் நவீன சீன எழுத்தாளர் லூஷுன் தலைமையில் இயங்கிய சீன எழுத்தாளர் லீக்கில் தீவிரமாக ஈடுபாடு கொண்டிருந்தார் ''பெய்ல் (மகா சரடி) என்ற இலக்கிய ஏட்டின் ஆசிரியராகப் பணியாற்றினார் இவருடைய நடவடிக்கை [illegible] அரசு, [illegible] 1933ல் சிறையில் தள்ளியது மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர் தப்பியோடிய டிங் லிங் விடுதலை செய்யப்பட்ட சீனப்பிரதேசத்தில் அடைக்கலம் புகுந்தார் யேனனில் தொடர்ந்து இலக்கியப் பணியில் ஈடுபட்டார்.

மாசேதுங் தலைமையில் சீன விடுதலையுற்ற சீனக் குடியரசு ஸ்தாபிதமானதும் ''வெகுஜன பாவோ'' (இலக்கிய ஏடு) ஆசிரியரானார். 1949ல் அகில சீன எழுத்தாளர் சங்கத்தின் உபதலைவராகத் தெரிவுசெய்யப்பட்ட டிங் லிங் மார்க்ஸீய இயக்கத்திலும் தீவிரமாக உழைத்தார். பிரபல இலக்கிய விமர்சகர் சௌ யிங் [illegible] யுடன் ஷிங் லிங்கும் அரசியல் குற்றச்சாட்டுகளுக்கு உட்படுத்தப்பட்டு, பீக்கிங்கிலிருந்து வெளியேற்றப்பட்டு தூரத்துக்கிராமமொன்றில் ''உழைப்பு மூலம் திருத்தப்பட'' அனுப்பப்பட்டார்.

தண்டனை அனுபவித்த முதல் 12 வருட காலத்தில் சீனாவின் வட-கிழக்கு மாகாணமான ஹெலோங் கியாங்கில் கடுமையான உடலுழைப்பு செய்யும்படி அவர் நிர்ப்பந்திக்கப்பட்டார். 1970 முதல் ஐந்து ஆண்டு காலம் அவரும் அவருடைய கணவரும் தனிமையில் சிறைவைக்கப்பட்டனர். இப்பொழுது 72 வயதாகிவிட்ட டிங் லிங் அம்மையாருக்கு முதுகில் கடினமான நோவு ஏற்பட்டுள்ளது. அவரால் உட்கார்ந்து எழுத முடியவில்லை. நின்றபடியே வேலைசெய்யவேண்டும்! நிலைமை இப்படி இருந்தும் நின்றவாறே ''குளிரான நின்மகள்'' என்ற நாவலை எழுதிவருகிறார். பீக்கிங் பத்திரிகைகள் வெளியிட்டுள்ள தகவலின் பிரகாரம் டிங் லிங் அனுபவித்த இட்டுமியங்களுக்கு ஒரு காலத்தில் தலைவர் மாசேதுங்கின் வாரிசு என்று விளம்பரம்செய்யப்பட்டவின் பியாவோ தான் காரணம்; ''நால்வர் கோஷ்டி'' தான் ஜவாப்தாரி என்றெல்லாம் சொல்லப்படுகிறது. சீனாவின் தலைசிறந்த பெண் எழுத்தாளர், தள்ளாத வயதிலும் நின்றவாறே இலக்கியம் படைத்துக்கொண்டிருக்கிறார்!



சேர்கோப்பூர்
36% (3, 4, டீ. பீ. ஏ. கொண்டது)

சேர்கோப்பூர் 36%, (பட்ட மாத்திரத்திலேயே) சேறுள அல்லது உலர்ந்த நெல் வயலில் உள்ள நெற்சப்பி, கோழிச்சூடன், குதிரைவாற்புல், கிடைச்சி, கோரை, மொண்டி ஆகிய சகல களைகளையும் கட்டுப்படுத்தும் வன்மையான களைநாசினி. உச்சப் பயன் பெற, விதைத்து 7-21 நாட்களுள் சேர்கோப்பூர் தெளிக்க வேண்டும். களைகள் 2-3 இலை விட்டிருக்கும் காலத்தில் பாவிப்பதே மிகச் சிறந்தது, சேர்கோப்பூர் 36% பாவித்து நெற்களைகளைக் கட்டுப்படுத்தி விளைச்சலைக்கூட்டி இலாபத்தைப் பெருக்குங்கள்.

தரமான
BAYER
பாயர் பீடைநாசினிகளைப் பாவியுங்கள்.

இலங்கையில் பாயர் பீடைநாசினிகளைத் தயாரிப்போர்:
ஹேக்கெம் லிமிட்டெட்
400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10. தொலைபேசி: 93563, 96331-6.
melADS

FINAL WEEK
RANEE [Jaffna] Daily at 10-30 a. m., 2-30, 4-30, 7-00 & 9-30 p.m.
After its record breaking run in Colombo now comes to entertain you.
The most eagerly awaited Film;
The Best War Film to be released after a lapse of several years;
OPERATION DAY BREAK
(One of the True great adventure story of our time.)

வெலிங்டன் தினசரி 3 காட்சிகள் சனி-ஞாயிறு 4 காட்சிகள்
ஜெய்சங்கர்-ராஜ்கோகிலா
எங்க பாட்டன் சொத்து

லிடோ (யாழ் நகர்) போன்: 7693 தினசரி 4 காட்சிகள்
ABBA THE MOVIE (Color)

REGAL (Jaffna)
Daily at 2-00, 4-30, 7-00, & 9-30 P. M
PETER CUSHING in
THE EARTH'S CORE
(Action Film-Colour)

வின்ஸர் தினசரி 10-30, பி.ப. 2-30, யாழ்ப்பாணம் 6-30, 9-30
சிவாஜி கே.ஆர்.விஜயா-சிவகுமார் வாசு நடித்த
கிரஹப்பிரவேசம்
(புதிய பிரதி)

## வெற்றி-தோல்வியில்லை

(வட்டுக்கோட்டை)

காரைநகர் விளையாட்டுக் கழகத்திற்கும் வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்திற்குமிடையில் தீபாவளித்தினத்தன்று நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

இப்போட்டி காரைநகர் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. (வெ-அ)

நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30, சனி, ஞாயிறு 2-30
எம் ஜி ஆர். — சாவித்திரி
மகாதேவி
(புதிய பிரதி)

வெஸ்லி (சாவகச்சேரி)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
ஜெமினி-சுஜாதா
லலிதா

RIO Jaffna Phone: 7607
Daily 10-30 a.m. 4-45, 7-00 & 9-30 p.m.
CONVOY

## சன்சோனி கமிஷன் விசாரணை:

# சிவகுமாரன் பற்றி முன்னாள் யாழ். உதவிப் பொலிஸ் அதிபர்

(கண்டி)

"அகில உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு ஏற்பாடுகளுக்குப் பொறுப்பாகத் திருமதி அமிர்தலிங்கமும் இருந்தார். யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட வன்செயல்களுக்குக் காரணம் அப்பகுதி இளைஞர்கள் எனத்தெரியவந்தது. அரசியல் காரணங்களுக்காக இவ்வாறு வன்செயல்கள் நடைபெறுவதாகவும், இவற்றின் பின்னணியில் ஓர் அரசியல் கட்சி இருப்பதாகவும் எனக்குத் தெரியவந்தது"

கண்டியில் மீண்டும் ஆரம்பமான சன்சோனி கமிஷன் விசாரணையில், ஓய்வு பெற்ற யாழ். உதவி பொலிஸ் அதிபரும் முன்னாள் பொலிஸ் அதிபருமான திரு. எஸ். கே. சந்திரசேகரா சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

"1974ம் ஆண்டு ஜனவரி மாதம் 9-ம் திகதி யாழ்ப்பாண வீதிகளில் கலாசார ஊர்வலம் ஒன்றினை [illegible] நடத்துவதற்குப் பொலிசாரின் அனுமதி மறுக்கப்பட்டது. ஊர்வலம் செல்வதற்கு அனுமதிவழங்கப்படாவிட்டால் நான் ஒரு வீடுகூட நகரவிடமாட்டேன் என்று சிவகுமாரன் தெரிவித்தார். பின்கோஷங்களை எழுப்பாது ஆர்ப்பாட்டமின்றி ஊர்வலத்தினை நடத்துவதற்கு அனுமதிவழங்கினேன். ஜனார்த்தனன், ஊர்வலத்தில் சென்ற விளம்பர வாகனத்தில் பொருத்தப்பட்டிருந்த ஒலிபெருக்கி மூலம் பேசுவதற்கு ஆயத்தமானார் என்ற செய்திகிடைத்து நான் ஜனார்த்தனன் அருகில் சென்றபோது அவர் பாய்ந்து ஓடிவிட்டார். இது நடைபெற்றது 1974ம் ஆண்டு ஜனவரி மாதம் 9ம் திகதி. வீரசிங்கம் மண்டபத்திலும் வெளியேயும் பெருந்திரளான மக்கள் குழுமியிருந்தனர். எனது ஜீப்வண்டி செல்லமுடியாத அளவுக்கு மக்கள் குழுமியிருந்தனர். எப்படியாவது கூட்டம் நடைபெறும் மண்டபத்துக்குச் செல்ல வேண்டும் என்பதற்குள் ஆயுதம் ஏந்திய பொலிஸ் கோஷ்டியுடன் நான் சென்றேன். அன்றைய பிரதமரின் மகன் யாழ்ப்பாணப் பிரதேசத்துக்கு அன்றையதினம் விஜயம் செய்த பகுதியை நோட்டமிடச்சென்றேன். தெல்லிப்பளை சந்தியில் நான் சென்ற ஜீப் வண்டிக்கு குண்டெறியப்பட்டது. வடபகுதித் தமிழ் இளைஞர்கள் பொலிசாரை 'பொலிஸ் நாய்கள்' என்றே அழைத்தார்கள். ஆசீர்வதிக்க நாய் சந்திரசேகரா நாய் என்று அழைப்பதற்கு அவர்கள் பழக்கப்படுத்தியிருந்தார்கள். சிவகுமாரன் அவரது கல்விப் பிரச்னை தொடர்பாக என்னுடன் கதைத்தார். 'தரப்படுத்தல் முறையினால் தனக்கு பல்கலைக்கழக அனுமதி கிடைக்கவில்லை' என்று அவர் தெரிவித்தார். இந்த பிரச்னை தனது முழுச் சமூகத்தையும் பாதிப்பதாகவும் இதற்குப் பரிகாரம் காண வேண்டும்'' எனவும் கூறினார். அவருக்கு தொழில்பெற்றுத்தருவதாக நான் கூறினேன். சிவகுமாரனின் மரணச் சடங்கில் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் வீராவேசமாகப் பேசியுள்ளார்கள்.

நல்லூர் [illegible] கார் சோதனையில், சிவகுமாரன் என்னைச் சுட முயன்றார். எனது ஜீப்பிற்குக் கைக்குண்டு எறிந்தனர். ஆனால் அவை போதிய மருந்துகளில்லாததால் வெடிக்கவில்லை.''

சட்டத்தரணி பாட்லட்: "தமிழர் விடுதலைக் கூட்டணியினர் இவ்வாறான கூட்டங்களில் பேசினார்கள் என்றால் அவர்களைக் கைது செய்திருக்கலாம் அல்லவா? ஏன் அவ்வாறு

[6-ம் பக்கம் பார்க்க]

## இன்றைய பலன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

யாரும் வேதனைப்படுத்தும், அமைதி தந்து.

**தனு:** சிக்கலை மேற்கொள்வதற்குச் சிறந்த நடவடிக்கைகளை எடுப்பீர்கள். குடும்பத்தில் பொறுப்புணர்ச்சி அதிகரிக்கலாம், எதையும் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்வீர்கள்.

**மகரம்:** சூழ்ச்சியின் உச்சக்கட்டம் வேதனையில் வீழ்த்திவிடும். ஆழ்ந்த சிந்தனையுடன் காரியத்தில் கண்வைப்பீர்.

**கும்பம்:** இலாபகரமான தொழிலில் முதலீடு செய்வீர்கள், வாகனச் சொந்தக்காரர்களுக்கு வருமானவிருத்தியுண்டு, தாய்வழிப் பொருள்வரவும் உண்டு.

**மீனம்:** பொதுமக்கள் மத்தியில் மதிப்பு உயரும். தமிழ் செல்வாக்கில் பிள்ளைகளுக்கும் பெரும் பங்குண்டு, ஆதரவுக்கு இடமுண்டு, நன்நாள்.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

## சிறுவர்களே...

(3-ம் பக்கத்தொடர்ச்சி)

தேவையான சகல வசதிகளும் வழங்கப்பட்டுவருகின்றன. இவற்றைப் பின்பற்றி எமது நாட்டிலும் சிறுவர்களின் நலனுக்கான எதிர்கால வளர்ச்சிக்கான செயல் திட்டங்களை உருவாக்கிநடைமுறைப்படுத்த சமூக நல நிறுவனங்கள் முன்வரவேண்டும்''

சித்தங்கேணி மாதர் முன்னேற்றச் சங்கத் தலைவி திருமதி பேரின்பநாயகி சுப்பிரமணியம் பேசுகையில் "சிறுவர்களை நல்வழிப்படுத்தி சிறந்த எதிர்கால பிரஜைகளாக உருவாக்குவதில் தாய்மாருக்கு பெரும் பங்குண்டு'' என்றார்.

திரு. ந. கலாநிதி, சி. விக்கினேஸ்வரன், ஏ. தட்சணாமூர்த்தி ஆகியோர் உட்படப் பலர் உரையாற்றினார்கள். போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களை திருமதி ஆர். கதிர்காமர் வழங்கினார். இப்பரிசில்களை வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகம் அன்பளிப்பு செய்திருந்தது குறிப்பிடத்தக்கது. கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன. (கு)

3-வது ஜனத்திரள் வாரம்!
ஸ்ரீதர் (யாழ்நகர்) தினசரி காலை 10-30 பி. ப. 2-30, 6-15, 9-45 தினசரி 4 காட்சிகள்
நடிகர்திலகம் சிவாஜிகணேசன்
நடிப்புச்செல்வி சுஜாதா
விஜயகுமார், அறிமுகம் சங்கீதா, நாகேஷ், சத்தியப்பிரியா சுந்தரராஜன் மற்றும் பலர் நடித்த
தீபம்
இசை: இளையராஜா (வர்ணக் கலர்) வெள்ளிவிழாச் சித்திரம்

சாந்தி யாழ்நகர். போன்: 7642. ஹவுஸ்புல்! ஹவுஸ் புல்!! ஹவுஸ்புல்!!! தினசரி 10-30, 2-30, 6-30, 9-45.
★ ஜெய்சங்கர் ★ ஸ்ரீதேவி, ★ ஸ்ரீகாந்த்,
★ எம். ஆர். ராதா ★ அசோகன் ★ மனோரமா
★ அறிமுகம் கவர்ச்சிக்கன்னி பிரவீணா
"டாக்ஸி டிரைவர்"
(வண்ணப் படம்)
அமரர் நடிகவேள் M. R. ராதாவின் பண்பட்ட நடிப்பை, பல ஆண்டுகளின் பின் பார்த்துப் பரவசம்கொள்ளவைக்குமொரு சிறந்த பொழுதுபோக்குச் சித்திரம்.

3-வது ஜனத்திரள் வாரம்
மனோஹரா A யாழ்ப்பாணம் தினசரி 4 காட்சிகள்
★ சிவாஜி கணேசன் ★ சுஜாதா
சந்திரமோகன், கவிதா, தேங்காய் சீனிவாசன்
மனோரமா, சுகுமாரி
மற்றும் முன்னணி நடிகர்களும் நடித்திருக்கிறார்கள்.
முக்தா பிலிம்சாரின்
அந்தமான்காதலி
இசை: எம். எஸ். விஸ்வநாதன் (வண்ணப்படம்)
முக்கிய அறிவித்தல்:- தினசரி மாலை 6-00 மணிக்காட்சி முடிவடைந்தவுடன் பஸ்நிலையம் வரை செல்வதற்கு விசேட பஸ் சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

ராஜா (யாழ். நகர்) இன்று மட்டும் தினசரி 4 காட்சிகள்
எம்.ஜி.ஆர்-வீரப்பா-சாவித்திரி நடித்த
மகாதேவி (புதிய பிரதி)
From 26th Oct ' 79
FIGHTING MAD
(பயங்கர சண்டைகள் நிறைந்தது)

